REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர். அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## ஓவியர் பாலு சகோதரர்களுக்கு

### காமராசர் பாராட்டு

"காலஞ்சென்ற வல்லபாய் பட்டேல் சிரிப்புடன் இருக்கும் படத்தை நான் பார்த்ததேயில்லை," என்று, ஓவியர்கள் பாலு சகோதரர்களின் ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்ட சென்னை முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டார். அப்படம் மிக அழகாக இருக்கிறதென்றும் கூறினார்.

மலர் 2] சென்னை: ஐப்பசி 27உ வெள்ளி (12—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 28உ சனி (13—11—54) [இதழ் 130

# அசோக் மேத்தா தாக்குண்டார்!

## கட்சித் தோழியின் மேற்போர்வை பறிபோயிற்று!

## தேசீய மாநாட்டுத் தொண்டர்—சர்க்கார் அதிகாரிகள் --- போலீஸ் படையினர் --- கூட்டு அமளி!

### குலாம் ஆட்சி பிறகட்சியினருக்குத் தரும் பரிசு

சிரிநகர், நவ. 11—

காஷ்மீர் மாநிலத்தில் இன்று பக்ஷி குலாமின் ஆட்சி—இல்லை—சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வருகிறது.

மக்கள் சோஷலிஸ்ட் கட்சியின் கிளை ஒன்றைத் துவக்கி வைப்பதற்காக அக்கட்சித் தலைவர் அசோக் மேத்தா, தம் தோழர்களுடன் அங்கு சென்றிருந்தார். அக்கட்சி மாநாடும் நடைபெற்றது.

சிரிநகரில் உள்ள லால் சவுக் பகுதிக்கு, 'தேனீர் அருந்தவும், அருபொருட்களைக் கொள்ளவும், வேடிக்கை பார்க்கவும்' அசோக் மேத்தா தம் சகாக்களுடன் சென்றார். அவர்களை, முதல் மந்திரி குலாம் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் சிலரும்—சர்க்கார் உத்தியோகஸ்தர்களும்—போலீஸ் படையினரும்—ஒன்றுகூடி வளைத்துக்கொண்டனர்.

வாயில் வந்தபடி வசைபாடி, மேத்தாவை எட்டி உதைத்தனர்—அடிக்கவும் செய்தனர். கடிக்கத்தான் இல்லை!

மேத்தாவின் கட்சித் தோழியரான வாசந்தி ஷேராப் அவர்களையும் அக்கும்பல் தாக்கியதுடன், அம்மையாரின் மேற்போர்வையையும் பறித்துக்கொண்டது.

உள்ளூரில் உள்ள ம. சோ. கட்சித் தோழரான உமர்பத் அவாமி என்பவரையும் நையப்புடைத்து, அவருடைய ஆடைகளையும் கிழித்தெறிந்தது அக்கூட்டம்.

மேற்படி கயவர்கள் கூட்டத்திலிருந்து தப்பி, ஒரு வாடகை மோட்டாரில் ஏறிச் செல்ல மேத்தா குழு முயன்றபொழுது மோட்டார் காரையும் சூழ்ந்துகொண்டு மேற்படி கூட்டத்தில் சிலர் தாக்கினர்.

இந்தச் சம்பவம் பிரதம மந்திரி நேருவிற்கும், ம. சோ. கட்சித் தலைவர்களுக்கும், காஷ்மீர் போலீஸ் தலைமை அதிகாரிக்கும் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

இச்செய்தியை, பத்திரிகை நிருபர்களிடம் அசோக் மேத்தா அவர்களே விளக்கிக் கூறியுள்ளார்.

## குடிதண்ணீர் சுத்தம்

### ரூ. 25 லட்சம் அங்கீகாரம்

சென்னை நகருக்கு வினியோகிக்கப்படும் தண்ணீரின் அளவை மேலும் அதிகப்படுத்தவும், தண்ணீரை சுத்தமாக்கவும் ரூ. 25 லட்சம் செலவில் துரிதமான இயந்திர வடிகட்டிகள் அமைப்பது என்ற திட்டத்தை சென்னை சர்க்கார் அங்கீகரித்துள்ளது.

அமைக்கப்படவிருக்கும் இந்த துரித இயந்திர வடிகட்டிகள், நாளொன்றுக்குச் சுமார் 100 லட்சம் காலன் தண்ணீரை வடிகட்டும் சக்தி பெற்றவைகளாக இருக்கும்.

தற்போது இத்திட்டத்திற்கான செலவு சென்னை சர்க்காரின் கடனுதவியின் மூலம் நடைபெறுமெனவும், சர்க்கார் இத்திட்டத்திற்கு மானியம் வழங்கும் விஷயம் பின்னர் கவனிக்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

## பாரசீக விவசாயிகளுக்கு வரி விதிப்பு இல்லை

### 10 ஆண்டுகள் விலக்களிப்பதாக பிரதம மந்திரி தகவல்

தெஹ்ரான், நவ—

பாரசீகப் பிரதமரான ஜெனரல் ஜாஹேதி, தனது தலைமையில் ஒரு பொருளாதாரக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரசீக எண்ணெய் வியாபாரத்தை மேற்கொண்டிருக்கிற எட்டுக் கம்பெனிகள், பாரசீகத்திற்குத் தருகிற சுமார் 200 கோடி ரூபாயை எப்படிச் செலவிடுவது என்பதுபற்றி அந்த பொருளாதாரக் குழு ஆய்ந்தறியும்.

அவர் மேலும் சொன்னார் :—

"எண்ணெய் வர்த்தகம் மூலம் கிடைக்கும் வருமானத்தை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவுமே நாங்கள் முயற்சிப்போம் என்று உறுதி கூறுகிறேன். சர்க்கார் உத்தியோகத்திலிருப்போருக்குச் சம்பளமும் படியும்தர, அந்த வருமானத்தைப் பயன்படுத்தக் கூடாதென வற்புறுத்திக் கூறுகிறேன்.

"வரி விதிப்பதிலும், முற்போக்கான வகைகளைக் கையாளுவோம்; பணக்காரர்கள், அதிகமான வரி விதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

"நிலமில்லாத விவசாயிகளுக்கு நபருக்கு எட்டு ஏக்கர் வீதம் நிலம் பிரித்துத் தரப்படும். விவசாயிகளிடமிருந்து இன்னும் 10 வருடங்களுக்கு சர்க்கார் எவ்வித வரியும் விதிக்காது."

## "நமது நாடு--ஓடு திருப்ப வேண்டிய ஒழுகல் வீடு; ரஷ்ய நாடு--ஒழுகாத காங்கிரீட் வீடு!"

### "மக்கள் பண்பட சமூக மறுமலர்ச்சி அவசியம்"

### கொள்கையில் சந்தேகம் கொள்வோர்க்கு அண்ணா தரும் விளக்கம்

"மக்கள் மனதில் தீய எண்ணங்களைப் புகுத்த உபயோகிக்கப்படும் எத்துறையிலும்—நாடகம், சினிமா, ஏடு, எழுத்து, தேர்தல் இவை அத்தனை துறையிலும்—நல்ல கருத்துக்களைப் புகுத்த நாம் முற்படத்தான் வேண்டும்—முற்படத்தான் செய்வோம்.

"இருபது ஆண்டுகளுக்கு முன்னர், எதைச் சொன்னால் மக்கள் சீறி விழுவார்களோ, சினம் கொண்டு ஏசுவார்களோ, அதை இன்று, மக்கள் வரவேற்கிறார்கள். நீங்கள் நினைத்தாவது பார்க்க முடியுமா—இப்போது, நண்பர் எம். ஆர். இராதா நடத்துகிற நாடகத்தை, இருபது ஆண்டுகளுக்குமுன் நடத்திவிட முடியும்—என்று? இன்று அந்த 'இராமாயண நாடக'த்தை மக்கள் வரவேற்கிறார்களே—எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்? மக்கள் விழித்துக் கொண்டார்கள் என்பதைக் காட்டவில்லையா இது?

"நாம் "இராமாயணம்' பற்றிப் பேசுவதால், சிலர் நம்மை, 'இவர்கள், இராவணன் பரம்பரையினர்,' என்று கூறுகின்றனர்; நாம் 'இராவணன்' பரம்பரையினர் என்றே ஏற்றுக் கொள்கிறோம்; எனவே, 'இராமன்' பரம்பரையினர் என்று கூறிக் கொள்ளுபவர்கள், சற்று எச்சரிக்கையாகவே இனி இருக்க வேண்டும்,"

இவ்வாறு, சென்னை தோழமைக் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார். (அவரது பேச்சின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது ; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது.)

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"நாம் ராமநவமியைப் பற்றிப் பேசும் நேரத்தில், ரௌலட் சட்டத்தையும் கண்டிக்கிறோம்!

"ஐ. நா. சபை குறித்துப் பேசும் அதே சந்தர்ப்பத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தையும் விளக்குகிறோம்; ஐவருக்குப் பத்தினியாயிருந்த திரௌபதையைப் பற்றியும் குறிப்பிடுகிறோம்!"

"இப்படி, மக்களின் வாழ்வுடன் தொடர்பு கொண்ட எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் நாம் பேசுவது, பலருக்குப் பிடிக்கவில்லை.

காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள்—'தி. மு. கழகத்தார், சமூக சீர்திருத்தம் பற்றி மட்டும் பேசக் கூடாதா? ஏன் அரசியலுக்கு வருகிறார்கள்'?—என்று!

கம்யூனிஸ்டுகள் நினைக்கின்றனர்—'ஏன், இவர்கள், அரசியலைப் பற்றி மட்டும் பேசக் கூடாது? வேண்டாத கடவுள்களையும், மதங்களையும் மக்கள் மன்றத்தில் பிரச்சினைகளாக்கிக் கொண்டிருப்பானேன்?'—என்று!

நமது கம்யூனிஸ்டு நண்பர்கள் கேட்கின்றனர் — மதத்தையும், கடவுள் நம்பிக்கையையும் பற்றி லெனின் பேசினாரா, அண்ணாதுரை இங்கே பேசுவதற்கு?'—என்று!

அவர்களுக்குச் சொல்கிறேன்—நான் லெனின் அல்ல; லெனின் செய்யாததை நாம் செய்கிறோம்; லெனின் 'செய்யாததை' என்றால், 'செய்ய முடியாததை' அல்ல; மாறாக, 'செய்யவேண்டாமற்போய் விட்டதை,' நாம் இங்கே செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

லெனின் காலத்திற்கு முன்பே, ஐரோப்பிய நாட்டில் பரவிய மறுமலர்ச்சி, ரஷ்ய நாட்டிலும் இடம் பெற்று, மக்கள் மனம் பண்பட்டிருந்தது. ரஷ்ய நாட்டிலேயே தோன்றிய டாஸ்டாவெஸ்கி, டால்ஸ்டாய் போன்றவர்களால் சமூக சீர்திருத்தம் ரஷ்ய நாட்டிலே பெரும் அளவு செய்யப்பட்டான பிறகுதான், லெனின் புரட்சிப் பாதையை வகுத்தார்—வகுக்கவும் முடிந்தது.

வீடு ஒழுகுகிறது; அந்த வீடு ஓடுகள் வேய்ந்த வீடென்றால், ஓடுகளைத் திருப்பினால்தான் ஒழுகல் நிற்கும்; ஓடுகள் திருப்பவேண்டிய ஒழுகல் வீடு நமது நாடு; அப்படிப்பட்ட நாடக இருக்கவில்லை, ரஷ்ய நாடு; ரஷ்யா, ஓடுகள் திருப்பவேண்டிய ஒழுகல் வீடாக லெனின் காலத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம்

### ரூ. 5,500 கோடி செலவிடப்படும்?

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம் ரூ. 5,500 கோடி செலவில் வகுக்கப்பட்டுள்ளதாக இருக்குமென்றும், இந்த அடிப்படைக்குள்ளாகவே மாநிலங்களும், திட்டக் குழுவும் தங்கள் தங்கள் திட்டங்களைத் தயாரிக்கும் என்றும் தெரிகிறது. இந்த ரூ. 5,500 கோடியில், சர்க்கார்கள் 3,000 கோடி ரூபாயும், தனிப்பட்டோர் 2,500 – கோடி ரூபாயும் முதலீடு செய்வர் என்றும் தெரிகிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடு ரூ. 3,500 கோடியாகும். அதில், சர்க்காரின் முதலீடு ரூ. 2,300 கோடியும், தனிப்பட்டோரின் முதலீடு ரூ. 1,200 - கோடியும் ஆகும்.

இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 7,500 – கோடி முதலீடு செய்வதென முதன் முதலில், திட்டக் குழு யோசித்ததாகவும், பிறகு அது நடவாத காரியம் என்று முடிவு செய்து அதைக் கைவிட்டு விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## 2 மாதத்தில் 2850 பேர் வெளியேறினர்

இலங்கையில் தற்காலிக வாச பர்மிட்டுகள் காலாவதியான இந்தியர்களில், செப்டம்பர் 11 முதல் நவம்பர் 9 வரை 600 பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர் என்று தெரிகிறது.

சர்க்காரால் கட்டாயமாக வெளியேற்றப்பட்டவர்கள் தவிர, 2,250 பேர் தாமாகவே மேலே குறிப்பிட்ட காலத்தில் இலங்கையை விட்டு வெளியேறிவிட்டனர்என்று தெரிகிறது.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 12—11—1954 வெள்ளி


# இருபது ரூபாய் லஞ்சம்!

தீண்டாமை, இந்து மதத்தின் ஆணி வேர்.

இந்து மதத்தைச் சேர்ந்தவர்களென சொல்லிக்கொள்ளப்படும், ஒவ்வொரு ஊருக்கும் வெளியில் ஒதுக்கி வைக்கப்பட்டுக் கிடக்கும் சிறுபான்மை மக்களைத்தான் தீண்டப்படாதவர்கள் என அழைத்து வருகிறோம். அப்படி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மக்கள், பிறரால் பலவித கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அவர்களும் மற்றவர்களைப்போல் மக்களாகக் கருதப்பட வேண்டும் என்பதை மனித உள்ளம் படைத்த எவரும் ஒப்பியே தீருவர் என்பதில் ஐயமில்லை.

தீண்டாமை தொலைய வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டவுடன், ஊருக்கு வெளியில் ஒதுக்கப்பட்டு இருக்கும், பரிதாபத்துக்குரிய அம்மக்கள் தான் நம் ஒவ்வொருவர் மனக் கண்முன்பும் தோன்றுகின்றனர். தீண்டாமை ஒழிப்புப் பேச்சும், அவர்களையே மையமாகக் கொண்டுதான் கிளம்புகிறது என்பதும் உண்மையே. இருந்தாலும் தீண்டாமை அம்மக்களை அடிமையாக்கிக் கொண்டிருப்பதோடு மட்டுமே நின்றுவிடவில்லை. அவர்கள் வசிக்கும் பகுதியோடு, அதன் பரப்பு கட்டுப்பட்டுக் கிடப்பதாகவும் இல்லை. சேரி மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிற தீண்டாமை தரத்தில் மிக மிகக் கூடுதலானதாக இருப்பதால், தீண்டாமை ஒழிப்பு என்றவுடன், அம்மக்களும், அவர்கள் தினம் தினம் பட்டுவரும் இடுக்கண்களும் நமது நினைப்பைப் பற்றிக் கொள்கிறது. ஆனால் தீண்டாமையோ, குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டத்தினரிடத்திலோ அல்லது குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்புக்குள்ளோ ஒடுங்கிக் கிடக்கும் ஒன்றாக இல்லை.

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைப் பெருமையாகக் கூறிக்கொள்ளும் ஒவ்வொருவரையும், தீண்டாமைத் தொழுநோய் பற்றிக்கொண்டு இருக்கிறது. அக்கொடுமைக்கு பலியாகாத ஒருவரும் இந்து மதத்தில் கிடையாது. குழாயடி சண்டையும், குளத்தங்கரை குழப்பமும், இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் உள்ளுணர்வில் உறைந்து கிடக்கும் தீண்டாமைத் தத்துவத்தின் கோரத் திருவிளையாடலேயாகும்.

அவன் தீண்டிய நீரை நான் பருகமாட்டேன்; அவன் வீட்டில் நுழைந்தால் தீட்டுப்பட்டுவிடும்; அவன் பார்த்த பண்டத்தைக் குப்பையில் போட வேண்டும்—என்றெல்லாம், இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களிடம், நாம் ஒவ்வொரு நாளும் கண்டுவரும் கயமைச் செயல்கள் அனைத்துக்கும், அந்தத் தீண்டாமை உணர்வுதான் ஊற்றுக்காலாகும்.

அவள் தாழ்ந்த ஜாதி, நான் அவளிலும் உயர்ந்த ஜாதி, எனவே, அவளை எப்படி என் மருகியாக்கிக் கொள்ளுவது என்று ஆணவங் கொண்டு பலர் கத்துவதும், அத் தீண்டாமை உணர்வின் கூறேயாகும்.

தீண்டப்படாதோர் எனக் கூறி, ஊருக்குக் புறமே ஒதுக்கித் தள்ளப்பட்டுக் கிடக்கும் மக்கள் உள்ளங்களையும், இத் தீண்டாமை உணர்வு உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டுதான் இருக்கிறது. அவர்களிடத்திலும் சிலர் உயர்ந்தவர்-சிலர் தாழ்ந்தவர் என்று வேற்றுமை பாராட்டும் தீண்டாமை உலாவிக்கொண்டுதான் இருக்கிறது.

மேற்கூறியவற்றால், தீண்டாமை,குறிப்பிட்ட ஒரு மக்களை மட்டுமோ, குறிப்பட்ட சிற்சில இடங்களை மட்டுமோ அடிமை கொண்டிருக்கும் ஒரு கொடுமை அல்ல என்பது மெய்யாகிறது. எனவே தீண்டாமை இந்து மத அமைப்புக்கான ஒரு பலம் பொருந்திய பயங்கரமான அஸ்திவாரம் என்பது விளக்கமாகிறது.

இந்த மகத்தான உண்மையைப் புரிந்து கொண்டால் தான், தீண்டாமையை ஒழித்துக்கட்டுவதற்கான முறைகளையும் நம்மால் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டதின் விளைவாகத்தான், சனாதன (அ)தர்ம ஏற்பாட்டை எதிர்த்து நாம் தீவிரமாகப் போராட வேண்டும் என்று இந்தியப் பேரரசில் அமைச்சராக உள்ள தோழர் ஜெகஜீவன் ராமும் கூறும் துணிவு பெற்றார் என்றே நாம் கருதுகிறோம்.

அரசியல் சட்டத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என சில வாசகங்களைச் சேர்த்து விட்டிருப்பதினாலேயே, தீண்டாமை ஒழிந்துவிட்டதாகப் பலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள்; அது வெறும் பித்தலாட்டம் என்றும் அவ்வமைச்சர் மனம் வெதும்பி கண்ணீர் சிந்தியிருக்கிறார். தீண்டாமையை உருவாக்கிப் பாதுகாத்து வரும் வருணாச்சிரம ஏற்பாடு ஒழிந்தால் அல்லாது, தீண்டாமையை ஒழிப்பது என்பது நிச்சயமாக முடியாது எனவும், அவர் அழுத்தந்திருத்தமாக அறிவித்துள்ளார்.

ஆண்டுக்கு ஒரு முறை சேரியை சுத்தம் செய்துவிடுவதாலும், அங்குள்ள மக்களுக்கு கொஞ்சம் எண்ணெயும் சீய்க்காய்ப்பொடியும் கொடுத்துவிடுவதாலும், கொடுமையிலும் கூடுதலாக இருக்கிற தீண்டாமை தொலைந்துவிடாது. அங்கு காணப்படும் தீண்டாமை, இந்துமத அஸ்திவாரத்தில் மறைந்து கிடக்கும் தீண்டாமைத்தொழுநோயின் ஒரு சிறு அறிகுறியாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நோய் களையப்பட்டால்தான், அதன் அறிகுறியும் மறைந்தொழியும் என்பது சாதாரண உண்மை.

இப்படி நாம் கூறுவதாலேயே, ஊருக்கு வெளியில் ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களின் கொடுமைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடக் கூடாது. அதனால் நற்பயன் விளையாது என நாம் கருதுவதாக எவரும் தவறாகப் பொருள் கொள்ளமாட்டார்கள் என்றே நம்புகிறோம். ஒருவரின் குருதியில் கலந்து போயிருக்கிற நோயைப் போக்கி இரத்தத்தைப் பரிசுத்தமாக்குவதற்கு, ஊசி மூலமோ, வாய்மூலமோ மருந்தைச் செலுத்துவதுடன், மாசடைந்த இரத்தத்தால் உடல் மேல் காணப்படுகிற அழி இரணத்தை ஆற்றுவதற்கு மருந்து இடுவதும் முக்கியத்திலும் முக்கியம் என்பதை நாம் மறந்துவிடவில்லை. அதைத் தவறு எனக்கூற நமக்கு அறிவுக் குழப்பமும் கிடையாது. நிற்க,

தீண்டாமை ஒழிப்புக்காக ஒரு விசித்திரமான முறையைக் கையாள முன்வந்திருக்கிறது பம்பாய் அரசாங்கம். அதாவது, ஒரு தீண்டப்படாத குழந்தையை வளர்க்க முன்வரும் ஒரு ஜாதி இந்துக் குடும்பத்திற்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் தருவதாக பம்பாய் அரசாங்கம் அறிவித்துள்ளது. இத்திட்டம் எந்த அளவு நடைமுறையில் வெற்றி பெறும் என்பது ஒருபுறம் இருக்க, இந்த ஏற்பாட்டால், பம்பாய் அரசாங்கம் கருதும் தீண்டாமைக் கொடுமை ஒழிப்புக்கு, இந்த ஏற்பாடு எந்த வகையில் உதவி செய்வதாக இருக்கும் என்பது சிந்திக்கத்தக்கது.

உத்தமர் காந்தியார் சூட்டிய அரிசனப் பெயரும், அரசியல் சட்ட ஏற்பாடும், இஸ்லாம் போன்ற பிற மதப் பெருக்கமும், இந்துக்களின் இருதயத்தை மாற்றும் மகத்தான செயலைச் செய்யத் தவறி விட்டிருக்கிறபொழுது, பம்பாய் அரசாங்கம் தர இருக்கும் 20 ரூபாய் இலஞ்சமா இந்து வெறியர்களின் ஜாதித் திமிரை ஒழிப்பதில் வெற்றியடையப் போகிறது?

இருபது ரூபாய் இலஞ்சத் தொகைக்கு ஆசை கொண்டு, அரிசனக்குழந்தைகளைவளர்க்க ஏற்றுக்கொள்ள முன்வந்தபோதிலும், தங்கள் குழந்தைகளுடன் அக் குழந்தைகளையும் சரி சமத்துவமாகக் கருதி வளர்ப்பர் ஜாதி வெறியர்கள் என்று எப்படி நம்புவது? அவர்கள் அவ்வாறு சமத்துவங் காட்டுகிறார்களா இல்லையா என்பதைக் கண்காணித்துவர, மேலும் பெருஞ் செலவில் ஒரு இலாகாவையும், அதற்கான சில அதிகாரிகளையும் நியமிக்க வேண்டிய கட்டாயம் பம்பாய் அரசாங்கத்திற்கு ஏற்படவே ஏற்படும்.

அதுவுமன்றி, மதுவிலக்கு செயலாற்றப்பட்டுவரும் அவலட்சணத்தால், கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு குடிசைத் தொழிலாகப் போய்விட்டது போன்றே, இந்த அரிசனக் குழந்தை வளர்ப்பும் ஒரு கள்ளக் குடிசைத் தொழிலாக வளர்ந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எவ்வளவுதான் வறுமை பிய்த்துத் தின்றபோதிலும், தாம் பெற்ற செல்வங்களை விட்டுப் பிரிய மனமில்லாத பெற்றோர்களே நாட்டில் அதிகம் உள்ளனர். பிறர் வளர்த்துக் கொள்ளட்டுமென, அவர்கள் எவ்வாறு தங்கள் குழந்தைகளை மனமொப்பிப் பிரிய முன்வருவர்?

அப்படியே பணத்துக்குப் புலியாகக் குழந்தைகளைக் கொடுத்துவிட முன்வந்தபோதிலும், குழந்தைகள் வளரும் இடங்களைத் தெரிந்துள்ளவர்கள், அடிக்கடி அக்குழந்தைகளைக் காண, அக்குழந்தைகள் வளரும் ஜாதி வெறியர்கள் வீட்டுக்குச் செல்ல முன்வராமல் இருப்பார்களா?

தாங்கள் பெற்ற குழந்தைகளைக் காண வரும் அரிசனப் பெற்றோர்களிடம், அக்குழந்தைகளை வளர்க்கும் ஜாதி வெறியர்கள் அன்பாகப் பழக மனமொப்புவரா?

குழவிப் பருவம் நீங்கி, சிறார் பருவமடைந்ததும், தங்கள் பெற்றோர்கள் இன்னார்தான் என்பதை அக்குழந்தைகள் அறியலானால், அதன் பிறகு அக்குழந்தைகள் பெற்றோர்களிடம் செல்ல முன்வருவரா? அல்லது இருபது ரூபாய் இலஞ்சம் வாங்கிக்கொண்டு தங்களை வளர்த்து வரும் ஜாதி வெறியர்களிடமே வளர்ந்து வர சம்மதிக்குமா?

இவ்வளவு கேள்விகளுக்கும் இடமுண்டு, இந்த இருபது ரூபாய் இலஞ்சத் தீண்டாமை ஒழிப்பில்! பம்பாய் அரசாங்கத்தின் தீண்டாமை ஒழிப்பு முயற்சியே முயற்சி!

## லிபியாவில் உள்ள பிரெஞ்சு இராணுவம்

### திருப்பி அழைத்துக்கொள்ள லிபியா முடிவு

கெய்ரோ, நவ. 10—

லிபியா மாநிலங்களில் மூன்றில் ஒன்றான பெஸ்ஸான் மாநிலத்தில் தங்கியிருக்கிற பிரெஞ்சுத் துருப்புக்களைத் திருப்பிப் பெற வேண்டும் என லிபியா அரசாங்கம், பிரெஞ்சு அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

பெஸ்ஸான் மாநிலம், லிபியா 1951-ல் மன்னராட்சியின்கீழ் ஒரு அரசாங்கமாக உருவாகும் வரையில் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்தது. அந்த மாநிலத்தில் பெட்ரோலியம் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் செய்துள்ளதுபோல், லிபியாவில் இராணுவம் வைத்துக் கொள்வதற்கான உடன்படிக்கை ஒன்றை லிபிய அரசாங்கத்துடன் செய்துகொள்ள பிரான்ஸ் சில் நாட்களாக முயற்சித்து வருகிறது.

மேலும், இப்போது பிரான்ஸ் லிபியாவில் இராணுவம் வைத்திருப்பதற்காகத் தருகிற 1,50,000 ஸ்டர்லிங் தொகையை, இரண்டு மடங்காகத் தருவதாகவும் கூறியுள்ளது என்று சொல்லப்படுகிறது.

## சென்னை மாநில தேர்தல் தொகுதி

### சர்க்கார் அறிவிப்பு

சென்னை, நவ. 10—

சென்னை மாநில சட்டசபை, மக்கள்சபைக்கான தொகுதிகள் பற்றிய இறுதி உத்திரவுகள் இவ்வார சர்க்கார் அறிவிப்பில் காணப்படுகின்றன.

மக்கள்சபை தொகுதிகள் மொத்தம் 41 என்றும், சட்டசபை தொகுதிகள் மொத்தம் 205 என்றும், இவற்றுள் சென்னை நகருக்கு மக்கள்சபை சார்பில் வடசென்னை, தென்சென்னை என 2 தொகுதிகள் என்றும், சட்டசபைக்கு 9 தொகுதிகளென்றும் காணப்படுகிறது. வண்ணாரப்பேட்டை, துறைமுகம், பேசின்பிரிட்ஜ், பெரம்பூர், ஆயிரம் விளக்கு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மைலாப்பூர், தியாகராயநகர் ஆகியவைகளே இந்த 9 தொகுதிகளாகும்.

41 மக்கள்சபை தொகுதிகளில் 8-ம், சட்டசபை தொகுதிகளில் 40-ம் இரட்டை உறுப்பினர் தொகுதிகளாக இருக்குமென்றும் காணப்படுகிறது.

## தேசீய அபிவிருத்திக் குழு

### பல மாநில முதல்வர்கள் தொடர்பு கொள்வர்

புதுடில்லியில் நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் குழு கூட்டத்தின் இறுதியில், சென்னை, பம்பாய், ஐதராபாத், மைசூர், பஞ்சாப், ராஜஸ்தான், திரு—கொச்சி, உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சினைகள் பற்றி ஆலோசனைகள் நடத்த, அபிவிருத்தித் திட்டக் குழுவுடன் இனிமேல் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமெனவும், இந்த 9 மாநில முதலமைச்சர்களையும், திட்டக் குழு உறுப்பினர்களையும் கொண்ட ஒரு நிரந்தரக் குழு ஒன்று உருவாக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இப்புதிய நிரந்தரக் குழு ஆண்டு ஒன்றுக்கு ஆறு தடவை கூடுமென்றும், திட்டக் குழு ஆண்டொன்றுக்கு இருமுறை கூடுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## நாட்டு செக்குத் தொழில் அபிவிருத்தி

### 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறுகிறது

மத்திய எண்ணெய் வித்துக்கள் இந்தியக் குழுவின் 8-வது கூட்டத்தின்போது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எண்ணெய்த் தொழில் அபிவிருத்திக்காக ரூ. 85 லட்சத் திட்டமொன்றைச் சேர்த்துக்கொள்ள அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம், எண்ணெய் வித்துக்களின் உற்பத்திப் பெருக்குக்காக ரூ. 25 லட்சமும், எண்ணெய் வித்துக்கள், பொருட்கள் விற்பனையைச் சீர்படுத்த ரூ. 20 லட்சமும், நாட்டுச் செக்குத் தொழில் அபிவிருத்திக்காக ரூ. 15 லட்சமும், எண்ணெய்த் தொழில் ஆராய்ச்சிக்கென ஓர் கழகத்தை நிறுவ ரூ. 25 லட்சமும் செலவிடப்பட இருக்கிறது.

இக்குழு, கடலையெண்ணெய் ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு, சர்க்கார், தனது ஏற்றுமதிக் கொள்கையைத் தளர்த்த வேண்டுமென்றும், உயர்ந்த பட்ச கோட்டா எதுவும் இதற்கு நிர்ணயிக்கக் கூடாதென்றும், பாகிஸ்தானுக்குக் கடுகு எண்ணெய் மட்டும் தான் ஏற்றுமதி செய்ய வேண்டுமே தவிர, கடுகு விதைகளை ஏற்றுமதி செய்வதை தடைசெய்ய வேண்டுமென்றும், உள்நாட்டுத் தேவைகளைத் தீர்த்த பிறகுதான் வெளிநாடுகளுக்கு புண்ணாக்கு ஏற்றுமதியை அங்கீகரிக்க வேண்டுமென்றும் சர்க்காரை வற்புறுத்தி, கிராம செக்குத்தொழிலை சரியான அடிப்படையில் நிறுவிக்க ஐதராபாத்தில் எண்ணெய்த் தொழில் பயிற்சி ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவவும் முடிவு செய்தது.

## வரதட்சணை எதிர்ப்பு நாள்

நவம்பர் திங்கள் 14-ம் நாளன்று, வங்க மக்கள் வரதட்சணை எதிர்ப்பு நாள் கொண்டாட வேண்டுமென்று நயாசமாஜத்தின் தலைவரும், மே. வங்க சட்டசபை உறுப்பினருமான பசந்தலால் முராகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுக் கூட்டங்கள் நடத்தி வரதட்சணை முறையைக் கண்டிக்குமாறும், தீர்மானங்கள் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்புமாறும் அவர் கேட்டிருக்கிறார்.

# "பாங்கிகளை தேசீய மயமாக்கக் கோருவோம்!"

## 'மக்கள் இனி மந்திரிகளை நம்பமாட்டார்கள்!'

*பாங்கி ஊழியர் கூட்டத்தில் தோழர் சாரி*

**"தேச நலன் கருதி பாங்கிகளை நடத்த வேண்டுமென பாங்கி சிப்பந்திகள், முதலாளிகளையும், அரசாங்கத்தையும் கோருகின்றனர். பாங்கி முதலாளிகள் தேச நலனில் அக்கரை காட்டாவிட்டால், பாங்கிகளை தேசீய மயமாக்குகிற கோரிக்கையை முன்வைக்க வேண்டிவரும்."**

"வருகிற டிசம்பர் 10-ந் தேதிமுதல், பாங்கி சிப்பந்திகள் நடத்தவிருக்கிற வேலை நிறுத்தம், ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கும்; நாட்டின் நடைமுறையை உருவாக்கும் வேலைக்கு, சாதாரண மனிதர்கள், தங்களைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறார்களேயன்றி, அரசாங்க மந்திரிகளையல்ல என்பதுதான் அந்தப் புதிய அத்தியாயமாகும்,"

—இவ்வாறு, உத்திர பிரதேச பாங்கி ஊழியர் சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையில் தொழிலாளர் தலைவர் ஏ. எஸ். ஆர். சாரி என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சில பாங்கிகள், தங்கள் கிளைகளை மூடிவிட்டிருக்கின்றன; அப்படி, எந்த ஒரு பாங்கியும் தனது நிலையை நீதிமன்றம் ஒன்றின் முன் வைத்து அனுமதி பெறாமல், தனது கிளை அலுவலகங்களை மூடக்கூடாது என்று அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும்."

# பிரகாசம் மந்திரி சபை இறுதிக் கூட்டம்

ஆந்திர மந்திரி சபையினரின் இறுதிக் கூட்டம், முதலமைச்சர் பிரகாசத்தின் விடுதியில் நடைபெற்றது.

மரமேறிகள் சத்தியாக்கிரகத்தில் சிறையிலடைக்கப்பட்ட கிருஷிகர் லோக் கட்சித் தலைவர் லட்சண்ணாவின் மனைவியார் உட்பட 11 மாதர்களையும் விடுவித்து விடுவதென மந்திரி சபை தீர்மானித்திருக்கிறது.

மேலும், சித்தூர் மாவட்டத்தில் பாகாலாவிலிருந்து வாயலபாடுவுக்கு மின்சார விரிவு படுத்தும் திட்டம் அனுமதிக்கப்பட்டு, ஆந்திர தபால்—தந்தி காரியாலயக் கட்டிடம் நிறுவ இராணித் தோட்டத்தில் நிலமொன்றை ஜாரிசெய்யவும் தீர்மானித்திருக்கிறது.

ராஜமகேந்திரபுரத்திலுள்ள மத்திய சிறையில் பெண்கள் கைதிகளுக்கென ஒரு லட்சம் ரூபாய் செலவில் தனிக் கொட்டடி ஒன்று கட்டப்படவும், விசாகப்பட்டினத்திலும், ரேபல்லியிலும் 40 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு மருத்துவ மனைகள் கட்டவும் அனுமதித்திருக்கிறது.

★

# ஆந்திர மந்திரி சபை கவிழ்ந்த காரணம்

*சஞ்சீவி ரெட்டியின் சந்தர்ப்ப வாதம்*

"வேலையிலிருந்து நீக்கப்பட்ட போலீஸ் அதிகாரி ஒருவரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வது பற்றி எழுந்த சச்சரவே, மந்திரி சபையின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது,"

என்று, ஆந்திர மாநில துணை முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி ருசிகரமான தகவல் ஒன்றைப் பத்திரிகை நிருபர்களிடை தெரிவித்திருக்கிறார்.

"அந்த அதிகாரியை (சப்—இன்ஸ்பெக்டர்) மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சில உறுப்பினர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கு நான் மறுத்துவிட்டேன்; அப்போதே எனக்குத் தெரியும் மந்திரி சபை கவிழ்ந்துவிடுமென்று! ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்பே மந்திரி சபை கவிழ்ந்துவிடுமென்று காங்கிரஸ் மேலிடத்தாருக்கும் தெரிவித்திருந்தேன்.

"நீக்கப்பட்ட ஒரு அதிகாரி மீண்டும் எடுத்துக் கொள்வதென்ற பிரச்சினை காரணமாக மந்திரி சபை கவிழ்ந்தது என்பது பற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சியே; இப்படிப்பட்ட நிலைமைகளுக்கிடையே எந்த ஒரு அரசாங்கமும் உருப்பட வழியில்லை."

# பாரசூட் பயிற்சி பள்ளி

ஆக்ராவிலுள்ள கேரியா விமான நிலையத்தில், விமானத்திலிருந்து 'பாரசூட் குடைகள்' மூலம் இறங்குவதற்கென, 'பாரசூட்' பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படுமெனவும், 8,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய இந்நிலையம், இந்தியாவிலேயே மிகப் பெரியதாக அமையும் என்றும் கூறப்படுகிறது.

# திருத்தணி பஞ்சாயத்துக் குழு

## ஆந்திர அதிகாரியின் உத்திரவு நிறுத்திவைக்கப்படுகிறது

சென்னை, நவ. 10—

ஆந்திர ஸ்தல நிர்வாக 'இன்ஸ்பெக்டர்' நவம்பர் 11-ந் தேதி முதல் ஒரு ஆண்டு காலத்துக்கு, திருத்தணி பஞ்சாயத்துக் குழுவைக் கலைத்து, தலைவரை பதவியிலிருந்து நீக்கிப் பிறப்பித்திருந்த உத்திரவை எதிர்த்து; அப்பஞ்சாயத்துத் தலைவர் டி. சரவணய்யா தாக்கல் செய்திருந்த ஆட்சேபணை மனு ஒன்றை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ராஜகோபாலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அவ்வுத்திரவை 3 வார காலத்திற்கு நிறுத்திவைக்கும்படி ஒரு இடைக்கால தடை உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார்.

பஞ்சாயத்துத் தலைவர் தமது மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இப்போதுள்ள பஞ்சாயத்துக் குழு நிர்வாகத்தில் தலையிட்டால் மிகுந்த இடையூறுகள் ஏற்படும்; இப்படிப்பட்ட நிலைமையில் நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவது, குழுவின் அலுவல்களைப் பெரிதளவு பாழ்படுத்திவிடும்; அது மட்டுமல்லாமல், சச்சரவுகளும், துவேஷ மனப்பான்மைகளும் வளர இடமுண்டாகிவிடும். எனவே, குழுவைக் கலைத்துவிட வேண்டுமென்ற இவ்வுத்திரவை ரத்து செய்துவிட வேண்டும்."

# உணவு இலாகா ஊழியர்கள்

## 55,000 பேருக்கு நிரந்தர உத்தியோகம் வேண்டும்

"உணவு, வினியோக இலாகாவிலுள்ள 55,000 ஊழியர்களை மற்ற இலாகாக்களில் எடுத்துக் கொள்ளும் விஷயத்தில் எல்லா மாநில முதல் மந்திரிகள் அனைவரும் கூடி ஒருமுகமான கொள்கையொன்றை வகுக்க வேண்டும்; எல்லா சிப்பந்திகளையும், அவர்களுடைய வயது, யோக்கியதாம்சங்கள், நிர்வாகத் திறமைகள் ஆகியவற்றைக் கருதாமல், அவர்களுடைய பழைய அனுபவத்தை மட்டும் கருதி நிரந்தர வேலையிலமர்த்த வேண்டும்."

என்று, இந்தூரில் நடைபெற்ற அ. இ. உணவு, வினியோக இலாகா ஊழியர்கள் மாநாடு ஒன்று, நேரு பண்டிதரைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இந்த இலாகாவிலுள்ளவர்கள் அனைவரும் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்றும், இவர்களுக்கு வேறு நிரந்தர வேலை தருவது மத்திய, மாநில சர்க்கார்களின் திட்டக் குழுவின் முக்கிய பொறுப்பென்றும் அந்த மாநாட்டில் கூறப்பட்டிருக்கிறது.

அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:—

"இந்த இலாகாவிலுள்ள பெண் ஊழியர்கள், தற்போது வேலை செய்யும் இடங்களிலேயே நீடித்திருக்கவோ, அல்லது அவர்கள் இருக்கும் ஊர்களில் இருக்கவோ ஏற்பாடு செய்யப்பட வேண்டும்; விவசாயத் தொழிலில் ஈடுபட விரும்புவோருக்கு நிலமும், சிறிய தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோருக்குக் கடன் உதவியும் தரப்பட வேண்டும்."

சர்க்காரின் உத்திரவு பெறப்பட்டும் கூட, ஆட்குறைப்புச் செய்யப்பட்டவர்களை, தபால், தந்தி இலாகாக்களில் வேலைதர நடவடிக்கைகள் எடுக்காமை குறித்து வருத்தம் தெரிவித்து, இப்பிரச்சினைகள் தீர, சிறிது காலத்திற்கு, இவ்வூழியர்களுக்கென விசேட கவனம் செலுத்தி அந்த இலாகாக்களில் வேலை கிடைக்கச் செய்வது அவசியம் எனவும் அம்மாநாடு தெரிவித்துள்ளது.

# புற்று நோய் பற்றுவதும்—புகை பிடிப்பதும் தொடர்புடையனவே!

## பிரிட்டிஷ் மந்திரி அறிவிப்பு

பிரிட்டனின் சுகாதார இலாகா மந்திரியான மாக் லியோட், மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், "சர்க்கார் நியமித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழு, சிகரெட் பிடிப்பதற்கும், புற்று நோய் பற்றுவதற்கும் தொடர்பிருக்கிறது என்று அறிவித்துள்ளதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது," என்று கூறினார். மேலும் அவர் சொன்னார்:—

"புற்று நோய் பற்றுவதற்குக் காரணமாயிருக்கும் பொருள், புகையிலை சுற்றப்படும் காகிதத்திலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் செய்யப்பட்ட தொடர்ந்த ஆராய்ச்சியின் விளைவாக, அந்தப் பொருள்களில் மேலும்சில, சிகரெட் புகையிலையிலும் இருக்கின்றன எனும் உண்மையும் வெளியாயிற்று. எனவே, அதிகமாக சிகரெட் பிடிப்பதற்கும், இருதயத்தில் புற்று நோய் பற்றுவதற்கும் தொடர்பு இருக்கிறது என்று பிரபல பிரிட்டிஷ் மருத்துவர்கள் கூறுகின்றனர்!"

# நெப்போலியன் வாழ்ந்த இல்லம்!

தென் அட்லாண்டிக் பகுதியில் உள்ள செயின்ட் ஹெலினா என்ற தீவில் இருக்கும் நெப்போலியன் வாழ்ந்த இடத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் திரும்பப் பெற்றுவிட முடியும் என்று, பிரிட்டனின் காலனி இலாகா அலுவலக அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

'லாங்வுட் ஓல்டு அவுஸ்' என்ற இல்லத்தில், நெப்போலியன் தான் நாட்டைவிட்டு துரத்தப்பட்டிருந்த ஆறு ஆண்டு காலத்தையும் கழித்தான்.

1821 முதல் 1840 வரை நெப்போலியனின் சடலம் இருந்தது என்பதைக் குறிக்கிற செங்குத்தான கற்பலகை ஒன்றுடன் கூடிய கல்லறை, இரும்புக் கம்பிகளால் சுற்றி வேலியமைக்கப்பட்டு, இன்னும் அத்தீவில் வசிப்பவர்களால் காப்பாற்றப்பட்டு வருகிறது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

# பர்மா அரிசியின் விலை குறைகிறது

பர்மா அரிசியின் வினியோக விலை குறைக்கப்பட்டிருக்கிறதாம்.

இதுவரை வங்காள மணங்கு ஒன்றுக்கு ரூ. 19—8—0 ஆக இருந்த அரிசி, விலை இப்போது ரூ. 18–8–0 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த விலை குறைப்பு நவம்பர் 10-ந் தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

இந்த விலை குறைப்பு, பம்பாயிலும், சௌராஷ்டிரத்திலும் உள்ள இந்திய அரசாங்கக் கிடங்கிலிருந்து வினியோகிக்கப்படுகிற அரிசிக்கு மட்டுமே மேற்கண்ட தேதி முதல் தரப்படும் எனவும் தெரிகிறது.

மைலோ, சோளம் ஆகியவற்றின் விலையையும் மணங்கு ரூ. 7—8—0 யிலிருந்து ரூ. 6 ஆக இந்திய அரசாங்கம் குறைத்திருக்கிறது என்று தகவல் தரப்படுகிறது.

# அகதிகளின் சொத்துக்கள்

## பாகிஸ்தான் அரசாங்கம் கணக்கெடுக்கிறது

பாகிஸ்தானில் அகதிகள் விட்டுச் சென்ற சொத்துக்களுக்கு, பாகிஸ்தான் சர்க்கார் விலை மதிப்புப் பட்டியல்களைத் தயாரித்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்தியாவில் முஸ்லிம் அகதிகள் விட்டுவந்த சொத்துக்களுக்காக அவர்களுக்கு நஷ்டஈடு தரவே இவ்வாறு பாகிஸ்தான் சர்க்கார் செய்கிறதாம்.

# அகதிகளுக்கு வேலை தேடித் தர...

## 'அவர்கள்' எடுத்துக் கொள்ளும் அக்கரை!

வட நாட்டு அகதிகளுக்கு வளமான வாழ்வுதர டெல்லி அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து வருகிறதென்பதை எல்லோரும் அறிந்ததே.

இப்போது, அந்த அகதிகள் பலருக்கு, நல்ல பலன் தரும் தொழில்களை ஆரம்பித்துத்தர மத்திய அரசாங்கம் திட்டமிட்டு வருகிறதாம்!

அகதிகளிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவே இந்த தீவிர முயற்சி என்று சொல்லப்படுகிறது.

புதியதாக, தனிப்பட்டவர்கள் தொழில் ஆரம்பிப்பதற்கு டெல்லி அரசாங்கம், சலுகைகள் பலவும், பலவகையான உதவிகளும் செய்து தருமாம்.

இந்தப் புதிய தொழில் வளர்ச்சிக்காக, ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சியுள்ள ஒன்றரை ஆண்டுக் காலத்தில் மூன்று கோடி ரூபாயை ஆரம்ப முதலீடாகக் கொண்டு அகதிகள் புனரமைப்பு இலாகா, புதிய தொழில்களை அகதிகளுக்குத் துவக்கித் தரும் எனவும் திட்டக் குழு அறிவித்திருக்கிறது.

புதிதாக தொழில் ஆரம்பிப்பவர்கள், அகதிகளை தங்கள் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்ள உறுதிமொழி தந்தால், தொழில் ஆரம்பிப்பதற்கான இடம், இயந்திர சாதனம், கட்டிடம், இன்னும் பிற எல்லா வசதிகளும், சலுகைகளும் இந்திய அரசாங்கம் தருமென்றும் சொல்லப்படுகிறது.

தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குத் தேவையான மூலதனத்தில் 50 சதவிகிதத்தை, அரசாங்கமே குறைந்த வட்டிக்குக் கடனாகக் கொடுத்து உதவவும் முன்வருமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# வள்ளுவர், வள்ளலார் பரிசுப் போட்டிகள்

சென்னை மாணவர் மன்றச் சார்பில் வள்ளுவர், வள்ளலார் பரிசுப் போட்டிகள் வழக்கம்போல் இவ்வாண்டும் 5-12-54 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மேல், சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை, அம்மன் கோயில் தெரு, டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர் பள்ளியில் நடைபெறும். 5-ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் முதல் 6-ஆம் படிவம் மாணவர்கள் வரை இதில் கலந்து கொள்ளலாம். கட்டணமும் விண்ணப்பமும் அனுப்ப வேண்டிய இறுதி நாள் 15-11-54.

மேலும் விவரம் வேண்டுவோர், "மாணவர் மன்றம், 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1, என்னும் முகவரிக்கு எழுதுக.

**வள்ளுவர் பரிசு**

உயர்நிலைப் பள்ளி— முதற்பரிசு: வெள்ளிக் கோப்பை; இரண்டாம் பரிசு: வெள்ளிப் பதக்கம்; மூன்றும் பரிசு: தமிழ் நூல்.

நடுநிலைப் பள்ளி—முதற் பரிசு: வெள்ளிக் கோப்பை; இரண்டாம் பரிசு: வெள்ளிப் பதக்கம்; மூன்றும் பரிசு: தமிழ் நூல்.

நடுநிலைப் பள்ளி-ஆரம்பப் பள்ளி— முதற் பரிசு: வெள்ளிக் கோப்பை; இரண்டாம் பரிசு: வெள்ளிப் பதக்கம்; மூன்றும் பரிசு: தமிழ் நூல்.

**வள்ளலார் பரிசு (பாட்டு)**

உயர்நிலைப் பள்ளி—நடுநிலைப் பள்ளி— முதற் பரிசு: வெள்ளிக் கோப்பை; இரண்டாம் பரிசு: வெள்ளிப் பதக்கம்; மூன்றும் பரிசு: தமிழ் நூல்.

மேலும், தகுதியுடையவர்களுக்கு நன்மதிப்பிதழ்களும் வழங்கப் பெறும். உயர்நிலைப் பள்ளி மாணவர், நடுநிலைப்பள்ளி மாணவர்கட்கும் பரிசுகள் வேறு, வேறு வழங்கப் பெறும்.

**கட்டணம்**

உயர்நிலைப் பள்ளி—ஒரு போட்டிக்கு 6 அணா.

நடுநிலைப் பள்ளி—ஒரு போட்டிக்கு 4 அணா.

## அகில இந்திய தபால் இலாகா ஊழியர்கள் சங்கம்

29—10—54-ல் நடைபெற்ற மேற்படி சங்க சென்னை கிளையின் 3-வது பிரிவு கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: பி. கே. புஜங்கராவ்; துணைத் தலைவர்கள்: சி. கே. பரிபூரணம், கே. நடராசன்; பொதுச் செயலாளர்: ஏ. எஸ். ராஜன்; பொருளாளர்: ஜி. லட்சுமணன்.

* * *

## ஆர். எம். எஸ். 3-வது பிரிவு ஊழியர்கள் சங்கம்

மேற்படி சங்கத்தின் நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: ஆர். கே. டன்ஸ்டன்; துணைத் தலைவர்கள்: திருநாவுக்கரசு, டி. பாபு செட்டி; பொதுச் செயலாளர்: பி. எச். வி. எஸ். பாண்டியன்; பொருளாளர்: கோவிந்தராஜுலு.

## சென்னை 23-வது வட்ட அழகிரி நினைவு மன்றம்

31—10—54ல் காலை 9½ மணியளவுக்கு நம்மாள்வார்பேட்டை சின்ன பாபு தெரு 28/8 எண் கட்டிடத்தில் தோழர் அ. ச. தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றத்தின் தேர்வுக் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: கே. 'பழம்நீ'; துணைச் செயலாளர்: இரா. இசைவாணன்; பொருளாளர்: புருஷோத்தமன்; செயற்குழு உறுப்பினர்கள்: இரா. ராசன், பி. ஆர். ராசன்; கலைச்செல்வன், ஜெயசீலன், மாசிலாமணி, ப. சுந்தரம் ஜி. கே. சேகர், ஐ. முனுசாமி, சுந்தரம், இராதாமணாளன்.

# பட்டினி தந்த வாட்டத்தால் பச்சிளம் குழந்தையைக் கொன்றவர்

## கொடிய எண்ணமல்ல; கொடுமையே காரணம்

### ஆயுள் கால சிறைத் தண்டனையை மூன்றூண்டு காலமாகக் குறைக்க உயர் நீதிமன்ற நீதிபதிகள் சிபாரிசு

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பாலபள்ளிக்குன்னம் எனும் கிராமத்தைச் சேர்ந்த மாரன் என்பவர், வேலை கிடைக்காமல் பட்டினி கிடந்து கஷ்டப்பட்டு, தமது 3 வயது பெண் குழந்தை ஒன்றை, கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, கோவை செஷன்ஸ் நீதிபதி அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தார்.

தமக்களிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை எதிர்த்து, சிறையிலிருந்த அவர் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொண்டார்.

அந்த அப்பீல் மனுவை விசாரித்துத் தீர்ப்பளிக்கையில், உயர் நீதி மன்ற நீதிபதிகள் பாலகிருஷ்ண அய்யரும், பஷீர் முகமது சையதும், "அக்குற்றம், கொலை செய்ய வேண்டுமென்றதோர் கொடிய நோக்கத்துடனே செய்யப்பட்டதல்ல ; உணவில்லாமல் தமது மனைவி பிள்ளைகள் படுந்துயரைக் காணச் சகிக்காமலேயே இதைச் செய்திருக்கிறார் ; எனவே, அவர் மீது அரசாங்கம் இரக்கம் காட்டலாம் ; அவருக்களிக்கப்பட்ட ஆயுள் தண்டனைக்குப் பதிலாக, மூன்றூண்டு சிறைத் தண்டனை போதுமென்றே நாங்கள் கருதுகிறோம்," என்று கூறியுள்ளனர்.

## புதிய மேயர்

### 23-ந் தேதி தேர்தல்

1954—55-ம் ஆண்டிற்கான சென்னை நகர மேயர் தேர்தல், இம்மாதம் 23-ந் தேதி நடைபெறுமென்று தெரிகிறது.

இம்முறை, பார்ப்பனரல்லாத ஒரு இந்துதான் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

பார்ப்பனரல்லாத இந்து ஆல்டர்மென்கள், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோருடைய கூட்டம் ஒன்று, இம்மாதம் 19-ந் தேதி மாலை 5½ மணிக்கு நடைபெறுமெனவும், அக்கூட்டத்தில் மேயர் பதவிக்கான அபேட்சகர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவா ரெனவும், அவருக்குப் போட்டியிருக்கும் பட்சத்தில், இம்மாதம் 23-ந் தேதி மாலை 4-30 மணிக்கு ஆல்டர்மென்களும், உறுப்பினர்களும் கூடி ஒரு முடிவுக்கு வருவர் எனவும், அவருக்குப் போட்டியாக யாரும் இராவிட்டால், 23-ந் தேதி மாலை 5-30 மணிக்கு நடைபெறப்போகும் நகர சபையினரின் சாதாரண கூட்டமொன்றில் மேயரும், உதவி மேயரும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவர் என்றும், மேயர் தேர்தலுக்கான தேதிகளை தற்போதைய மேயர் நிர்ணயித்திருக்கிறார்.

## மீனவர் தூதுக் குழு

### மத்திய விவசாய மந்திரியிடம் குறைகளை முறையிட்டது

"தென்னிந்தியாவிலுள்ள மீன் பிடிக்கும் சமூகத்தினர் கல்வி அறிவு பெறாதவர்கள்; அவர்களுக்குக் கடற் பயிற்சி அளிக்க சென்னையில் எல்லா வசதிகளும் அமைக்கப்பட்ட ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும்; மீன் பிடிக்கும் சமூகத்தாரிலுள்ள இளைஞர்களுக்கு, விஞ்ஞான முறைகளைக் கற்றுத் தர அதில் வசதி செய்து தரப்பட வேண்டும்,"

என்று, சென்னை மாகில மீன் பிடிப்போர் ஐக்கிய முன்னணி தூதுக் குழு ஒன்று, மத்திய விவசாய மந்திரி பஞ்சாப் ராவ்தேஷ்முக்கிடம் தரப்பட்ட மனு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

அந்த மகஜரில் மேலும் அவர்கள், நாட்டிலுள்ள வர்த்தகக் கப்பல்களில் தென்னிந்திய பரதவர் சமூகத்தினரை அதிகமாகத் திரட்டவேண்டுமென்றும், அப்படி திரட்டப்படுபவர்கள் இந்தி மொழி கண்டிப்பாகக் கற்றிருக்க வேண்டுமென்ற விதி தளர்த்தப்பட வேண்டுமென்றும், தமிழ்மொழி மட்டுமே தெரிந்த அவர்களுக்கு, இவ்விதி, பெரியதொரு தொல்லையாக அமைந்துள்ளது, என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சோழ மண்டலக் கரைகளிலுள்ள நதி முகப்புகளில் மீன் பிடிக்கும் கட்டுமரங்களுக்கான படித்துறைகள் அமைத்துத் தரவும், அதற்குஆரம்பமாக, சென்னை கூவம் நதியில் ஒரு 'மாதிரி'த் துறை கட்ட வேண்டுமென்றும் அம்மனுவில் தெரிவித்துள்ளனர்.

## செய்திப் படக் காட்சி

இந்திய சர்க்கார் படத்தயாரிப்பு இலாகாவினர் தயாரித்த செய்திப் படங்கள் சில, சென்னை எல்பின்ஸ்டன் தியேட்டரில் இன்று காலை 10 மணிக்கு பத்திரிகை நிருபர்கள், படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பிரமுகர்கள் ஆகியோருக்கு திரையிடப்பட்டன. சென்னை முதலமைச்சர் காமராசர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

திரையிடப்பட்ட செய்திப் படங்களில், சிற்பக் கலை பற்றியும், ஒலியின் பலதரப்பட்ட பயன்கள் பற்றியும் காட்டப்பட்டவை, தரவுடன் காணப்பட்டன. பண்டித நேருவின் கீழ்நாடுகள் சுற்றுப் பயணம் பற்றிய நிகழ்ச்சிகள் சில திரையிடப்பட்டன.

மனித வாழ்வின் நுணுக்கங்கள் பற்றிய காட்சிகள் பாராட்டத் தக்கவையாயிருந்தன.

## சரியான ஜோடி

கொல்லத்தைச் சேர்ந்த 74 வயதுடைய தாரியன் இஸ்லக்ஸ் என்னும் வயோதிகர் ஒருவர், 73 வயதுடைய சோசம்மா என்ற மாது ஒருவரை, சென்ற 8-ந் தேதியன்று கிருத்துவக் கோயில் ஒன்றில் வைத்துத் திருமணம் செய்து கொண்டாராம்!

இஸ்லக்ஸ் அவர்களின் முதல் மனைவியார் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் மரணமடைந்தாராம். அவருக்கு இரண்டு புதல்வர்களும் 4 புதல்விகளும் 40 பேரக் குழந்தைகளும் இருக்கிறார்களாம்!

சோசம்மாள் எனும் மாது ஒரு விதவையென்றும், அவருக்கு 52 வயதுடைய மூத்த குமாரர் ஒருவர் இருக்கிறாரென்றும், மேலும் அவருக்கு ஏராளமான மக்களும், பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்களென்றும் கூறப்படுகிறது.

## ரஷியா தரும் கடன் உதவி

### 20 இலட்சம் டாலர் ஆப்கனிஸ்தான் பெறும்!

சோவியத் ரஷியா, ஆப்கனிஸ்தானத்திற்கு சுமார் 20 இலட்சம் டாலர் கடன் உதவி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று, இரு நாடுகளுக்கிடையேயும் கையெழுத்தாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தப்படி, ஆப்கனிஸ்தானத்திற்கு, ரஷியா சாலையமைக்கும் இயந்திரங்கள், விஞ்ஞான பரிசோதனை சாலைகளுக்கான உபகரணங்கள் இவையெல்லாம் தந்து உதவும் எனச் சொல்லப்படுகிறது.

## அண்ணாவிளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவில்லை; மத, மாச்சரிய, கடவுள், புராண நம்பிக்கைகள், மக்கள் மனத்துள் ஒழுக இயலாத மறுமலர்ச்சி எனும் காங்கிரீட் வீடு, அங்கு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஆகவேதான், நாம் கூறுகிறோம்—"இந்த நாட்டில் மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பேசவேண்டியவர்களாயிருக்கிறோம்"—என்று!

இன்னும் சிலர் கேட்கின்றனர்—மா-சே-துங் சீனவில் நாடகமாடினரா? நீ ஆடுகிறயே, நியாயமா?—என்று!

மா-சே-துங் அல்ல; அண்ணாதுரை; மா-சே-துங் நாடகமாட வேண்டிய அவசியம் சீனவிலிருக்கவில்லை; நாடக மூலம் நச்சுக் கருத்துக்களை நடமாட விடுகிற அவலநிலை அந்த நாட்டிலிருக்கவில்லை; அதனுல் அவருக்கு அந்த நாட்டில் நாடக மூலம் நல்ல கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கவில்லை.

இங்கு அப்படி இல்லையே! நச்சுக் கருத்துக்கள், நாடகத்தின் மூலமும் மக்கள் மனத்துள் திணிக்கப்பட்டுள்ளனவே! எனவேதான், நச்சுக் கருத்துக்களை நீக்கி, நல்ல கருத்துக்களை மக்கள் மனதில் இடம்பெறச்செய்ய, நாம் நாடகமாட வேண்டியிருக்கிறது.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு தொடர்ந்து பேசியதாவது :—

"இன்று, நாட்டிலே தோன்றியுள்ள விழிப்புணர்வுதான் உண்மையான நாட்டுப் பற்று ; விடுதலை தாகம்! ஏனெனில், மக்களுக்கு நாட்டைப் பற்றி உணர்த்துபவர்களாகிய நாம், மிகச் சாதாரண மானவர்கள்; நம்மை லட்சோபலட்சம் மக்கள் பின்பற்றுகிறார்கள் என்றால், நாம் என்ன அருள் பெற்றவர்களா? அசகாய சூரர்களா? அந்தஸ்து மிக்கவர்களா? பணக்காரர்களா? இல்லையே—மிக மிகச் சாதாரணமானவர்கள்!

தாட்சணியத்திற்காக நம் கருத்திற்கு, மக்கள் தாளம்போடவேண்டிய அவசியம் இல்லை. நம்மிடம் என் மக்கள் தாட்சணியம் பார்க்கப் போகிறார்கள்.?

அவ்வளவு சாதாரணமான நம்மால் கூறப்படும் கருத்து, தங்களுக்குத் தேவையானதென மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பது தான், அவர்களது உண்மையான நாட்டுப் பற்றைக் காட்டுகிறது.

அந்த நாட்டுப் பற்று வளர, விடுதலை ஆர்வம் மேலோங்க, அவர்களின் சுதந்திர இலட்சியம் ஈடேற, இத் தோழமைக் கழகத்தார் தீவிரமாகப் பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

## நாளுக்கு ஒரு மணம் புரியும் நாரிமன்!

எகிப்தின் முன்னாள் மன்னர் பரூக்கின் ராணியாயிருந்தார் நாரிமன் என்ற நாரீமணி; அந்த மணவாழ்வில், ஒரு குழந்தைக்கும் தாயானர்.

பின்பு, மன்னர் பரூக், மன்னர் பதவியை இழந்ததும், மணவிலக்கு செய்து கொண்டார் நாரிமன்.

பிறகு, நாரிமன், இரண்டாம் முறையாக டாக்டர் ஆதம் நகீப் என்பவரின் மனைவியானர்; அவரிடமிருந்தும் மணவிலக்கு கோரி மனுச் செய்துள்ள அந்த அம்மணி, இப்போது இன்னொருவரை மணந்து கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அரேபியாவில் உள்ள குவாயத் எனும் இடத்தைச் சார்ந்த ஷேக் சாஜிஜாபர் என்ற 38 வயதுடைய ஒரு பெரிய லட்சாதிபதி, நாரிமன் குடும்பத்தாரிடம், தான் நாரிமனை மணந்து கொள்ள விரும்புவதாகக் கூறியுள்ளார்.

## கழகக் கூட்டங்கள்

★

**இலங்கை**

தி. மு. கழக ஆண்டு விழா அறிக்கை
கொச்சிக்கடைநகரமண்டபத்தில்
13-11-54 பிற்பகல் 3 மணிக்கு
தலைவர் : இரா அதி. மணி
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். கதிரவன்
கே. எஸ். எம். கலாநேசன்
டி. எம். பீர் முஹம்மது
ஆரு. அன்பழகன்

★

**திருப்பூர்**

திராவிட மாணவ முன்னேற்றக் கழக மூன்றும் ஆண்டு விழா
ஸ்ரீ கெஜலட்சுமி தியேட்டரில்
14-11-54 காலை 10-30 மணிக்கு
தலைவர் : மு. முத்துரத்தினம்
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
அ. பொன்னம்பலனர்
கே. ஆர். இராமசாமி
நன்கொடை அணா 2

* * *

திருப்பூர் ரேடியோ மைதானத்தில்
14-11-54 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
அ. பொன்னம்பலனர்

★

**அண்ணாமலைநகர்**

14—11—54 ஞாயிறு மாலை
தலைவர் : இரா. இளம்வழுதி
பேசுபவர் :
மு. கருணாநிதி

★

**கவுந்தப்பாடி**

வரவேற்பு விழாக் கூட்டம்
பழைய ரைஸ்மில்காம்பவுண்டில்
15-11-54 காலை 7-30 மணிக்கு
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
அ. பொன்னம்பலனர்
கே. ஆர். இராமசாமி

★

**கோபி**

நிதியளிப்பு விழா பொதுக்கூட்டம்
பெரியார் மைதானத்தில்
15—11—54 மாலை 7 மணிக்கு
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
அ. பொன்னம்பலனர்
கே. ஆர். இராமசாமி

★

**உத்தரமேரூர்**

தி. மு. கழக (கிளை) துவக்க விழா
15—11—54 திங்கள் மாலை
பேசுவோர் :
என். வி. நடராசன்
வி. எஸ். கோவிந்தராசன்
மதிவாணன்

★

**காங்கயம்**

திருப்பூர் ரோடு,பி.முத்து திடலில்
16—11—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. முத்து
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
அ. பொன்னம்பலனர்

### கடலூர் ஒ. டி. 2-வது வட்டக் கிளை தி. மு. கழகச் செயற் குழு தோழர்கட்கு

14—11—54 மாலை 7 மணிக்கு கடலூர் ஒ. டி., அண்ணா அன்பு நிலையத்தில் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

### உறையூர் தி. மு. கழகத் தோழர்கட்கு

"21-11-54 மாலை 6 மணிக்கு உறையூர் தி. மு. கழகப் பணிமனையில் கழகப் பொதுக் குழுக் கூட்டம் தோழர் அன்பில்-தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். அது போது வரும் ஆண்டுக்கு செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறும். தேர்தல் அதிகாரியாக தோழர் ஜி. பராங்குசத்தை நியமித்திருக்கிறது. மேலே கண்டவைகளுக்கு கழகத் தோழர்கள் தங்களின் அபேட்சா மனுவை செயலாளருக்கு 15—11—54 இரவு 9 மணிக்குள் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்" என, உறையூர் தி மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

### சிறப்புச் சொற்பொழிவு

14—11—54 காலை 10 மணியளவில், அருப்புக்கோட்டை எஸ். பி. கே. உயர்நிலைப் பள்ளியில், தோழியர் தே. தியாகராசன் அவர்கள் 'பாரதி கண்ட புதுமைப் பெண்' என்ற பொருள் பற்றி விரிவுரையாற்றுவார்.

### உலக சமாதானப் பொதுக் கூட்டம்

14—11—54 மாலை 5 மணிக்கு வாணியம்பாடி வாரச்சந்தை அருகில், பிர்க்கா சமாதான ஆர்கனைசிங் கமிட்டியின் சார்பில், தோழர் வி. எஸ். விஸ்வநாதம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

## கல்லூரி மாணவர் அறப்போர் நிறுத்தம்

விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி மாணவர் விடுதியில் வசதிகள் கோரி உண்ணாவிரதம் இருந்த 435 மாணவர்கள், தங்கள் அறப்போரை முடித்துக் கொண்டனர் என்று தெரிகிறது.

சிவகாசி ரெவினியூ டிவிஷனல் அதிகாரி, உதவி போலீஸ் அதிகாரி ஆகியோர், கல்லூரி அதிபர்கள், மாணவர் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து பேசியதில் நல்ல முடிவு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

மாணவர்கள் உணவருந்தத் தனி இடம் ஒன்று ஜனவரிக்குள் கட்டித்தரப்படும் என்று மாணவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டதாம் ; உணவு விடுதியின் சமையல் பகுதி மானேஜரை நீக்கிவிடுவதாகவும், மாணவர்களின் 11 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும், மாணவர்களில் யாரையும் இதன் காரணமாகப் பழி வாங்குவதில்லை என்றும் உறுதியளிக்கப்பட்டதாம்.

மாணவர்களின் அறப்போரினுல் இரண்டு நாட்களாகக் கல்லூரி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நாகர்களின் தனி நாடு கோரிக்கை

### தலைவர்கள் கைவிட்டு — விட்டதாகத் தகவல்!

நாகர் தேசிய கவுன்சில் தலைவர்களும், பிரதேச நாகர் தலைவர்களும், இதுகாறும்வரை தாங்கள் கோரிவந்த தனி நாக நாடு கோரிக்கையை விட்டு விட்டு, இப்போது, நாகர்களுக்கென்று தனி மாநிலம் ஒன்று, இந்திய யூனியனுக்குள்ளேயே அமைத்துத் தருமாறு இந்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியுள்ளதாக செய்தி வெளியாகியிருக்கிறது.

நாகர் தலைவர்களின் கடிதத்தின் நகல்கள் குடியரசுத் தலைவர் இராசேந்திரருக்கும், பண்டிதநேருவுக்கும்கூட அனுப்பப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்., ஏ